# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 02 திங்கட்கிழமை 16.06.2025 கதிர் 227









## கொழும்பு மாநகர சபை தேசிய மக்கள் சக்தி வசம்

கொழும்பு, ஜூன் 16

கொழும்பு மாநகர சபையின் புதிய மேயராகத் தேசிய மக்கள் சக்தி சார்பில் போட்டியிட்ட விராய் கெலீ பல்தசார் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கொழும்பு மாநகர சபை மேயரைத் தெரிவு செய்வதற்காக இரகசிய வாக்கெடுப்பை மேற்கொள்ள மேல் மாகாண உள்ளூராட்சி சபை ஆணையாளர் எஸ்.கே. ஜயசுந்தர முன்னிலையில் இன்று முற்பகல் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

அதற்கமைய இரகசிய வாக்கெடுப்பு நடவடிக்கை நடை பெற்றது.

கொழும்பு மாநகர சபை மேயர் பதவிக்குத் தேசிய மக்கள் சக்தி சார்பில் விராய் கெலீ பல்தசாரும், ஐக்கிய மக்கள் சக்தி சார்பில்

7

## ஒரு வாக்கு வித்தியாசத்தில்

# வவுனியா மாநகர சபையை கைப்பற்றிய சங்குக் கூட்டணி



### மேயராகக் காண்டீபன் தெரிவு தமிழரசுக் கட்சி முழு ஆதரவு

வவுனியா, ஜூன் 16

வவுனியா மாநகர சபையை ஒரு வாக்கு வித்தியாசத்தில் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி கைப்பற்றியுள்ளது.

அந்தக் கூட்டணியைச் சேர்ந்த சுந்தரலிங்கம் காண்டீபன் மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

7

## வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபை சஜித் தரப்பு ஆதரவுடன் அநுர அணி வசம்

வவுனியா, ஜூன் 16

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபையில் தேசிய மக்கள் சக்தியைச் சேர்ந்த சுதர்சன சாமர வீரக்கோன் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளதுடன் பிரதி தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் குணபால சரத்மது ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா தெற்கு சிங்கள பிரதேச சபைக்கான தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள், வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர்

7



## அநுர – கீதா சந்திப்பு

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதி முகாமைத்துவப் பணிப்பாளர் கலாநிதி கீதா கோபிநாத் உள்ளிட்ட தூதுக்குழுவினரை இன்று முற்பகல் ஜனாதிபதி செயலகத்தில் சந்தித்தார்.

இலங்கைக்கு அண்மையில் நிதி

7





## ஏறாவூர் நகர சபை மு.கா. வசம்!

### சங்குக் கூட்டணி, தமிழரசுக் கட்சி ஆதரவு

ஏறாவூர், ஜூன் 16

மட்டக்களப்பு, ஏறாவூர் நகர சபையின் தவிசாளராக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எஸ். நழீமும், உப தவிசாளராக ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஞானசேகரன் கஜேந்திரனும் தெரிவு செய்யப்பட்டனர்.

17 உறுப்பினர்களைக் கொண்ட ஏறாவூர் நகர சபைக்கான தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத்

7

# முல்லைத்தீவிலுள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இருகடைகள் முற்றாக எரிந்து நாசம்!



கொழும்பு, ஜூன் 16

முல்லைத்தீவு கிச்சிராபுரம் கிராம சேவையாளர் பிரிவிக்குட்பட்ட மாஞ்சோலை வைத்தியாசாலை முன்பாக உள்ள உணவகம் ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் இருகடைகள் முற்றாக எரிந்துள்ளது.

குறித்த சம்பவம் இன்று (16) காலை இடம்பெற்றுள்ளது.

தீபரவியதை அடுத்து கடைகளிலுள்ள பொருட்கள் துரித கதியில் அகற்றப்பட்டுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த இராணுவம், பொலிஸார், அப்பகுதி வர்த்தகர்கள், பொதுமக்கள் இணைந்து தீயினை கடும் பிரயத்தனத்தின் மத்தியில் கட்டுக்குள் கொண்டு வந்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் மற்றும் பிரதேச சபையின் உறுப்பினர்கள் சம்பவ இடத்துக்கு வருகை தந்து பார்வையிட்டனர்.

தீ ஏற்பட்டதற்கான காரணம் தொடர்பில் இதுவரையி கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பிலான விசாரணைகளை முள்ளியவளை பொலிஸார் முன்னேட்ஜ/த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் தீயணைப்பு வசதி இதுவரை ஏற்படுத்தப்படவில்லை, தீ பரவும் சந்தர்பத்தில் தீயணைப்பு கருவி இல்லாத காரணத்தினலே பெரும் அசம்பாவிதங்கள் ஏற்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்திருந்த னர். ஏற்படுவதாகவும் மக்கள் விசனம் தெரிவித்திருந்தனர்.

# நிதி மோசடியில் ஈடுபட்ட 88 நபர்களின் சொத்துக்கள் முடக்கம்!

கொழும்பு, ஜூன் 16

திட்டமிட்ட குற்றம் மற்றும் நிதி மோசடியில் ஈடுபட்ட 88 நபர்களின் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளன.

அவர்களில் 26 பேர் திட்டமிட்ட குற்றம் மற்றும் போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டுக்கு உள்ளானவர்கள் என்று காவல்துறையினர் தெரிவித்துள்ளனர்.

பணமோசடி தடுப்புச் சட்டத்தின் கீழ், ஏனையவர்களின் சொத்துக்கள் முடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலம், வீடுகள், வங்கிக் கணக்குகள், வாகனங்கள், நகைகள், வணிக வளாகங்கள் மற்றும் வயல்கள் ஆகியவை முடக்கப்பட்ட சொத்துக்களில் அடங்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அநுராதபுரம் சிறை கைதி விடுவிக்கப்பட்ட சம்பவம்– நீதி அமைச்சின் நிர்வாக தர அதிகாரியிடம் CID வாக்குமூலம்!

*கொழும்பு, ஜூன் 16*

*ஜனாதிபதி பொது மன்னிப்பை முறைகேடாகப் பயன்படுத்தி அனுராதபுரம் சிறைச்சாலையிலிருந்து கைதியொருவரை விடுதலை செய்த சம்பவம்தொடர்பாக நீதி அமைச்சின் நிர்வாக தர அதிகாரி ஒருவர் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்கு அழைக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

*இதற்கிடையில், கடந்த காலத்தில் வழங்கப்பட்ட ஜனாதிபதி பொது மன்னிப்பை பயன்படுத்தி கைதிகள் சட்டவிரோதமாக விடுவிக்கப்பட்டார்களா என்பது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக, நாடு முழுவதும் உள்ள 28 சிறைச்சாலைகளுக்கும் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் அனுப்பப்பட்டுள்ளதாகவும், அவர்கள் ஏற்கனவே விசாரணைகளைத் தொடங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.*

*கைதியின் விடுதலை தொடர்பாக அனுராதபுரம் சிறைச்சாலை அத்தியட்சகர் மற்றும் சிறைச்சாலை ஆணையர் நாயகம் ஆகியோர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.*



# கொழும்பு - யாழ். விமான சேவைக்கு அனுமதி






கொழும்பு, ஜூன் 16

கொழும்பு, இரத்மலானை விமான நிலையம் மற்றும் யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் இடையே நேரடி உள்நாட்டு விமான சேவையை இயக்குவதற்கான, விமானக் செயல்பாட்டுச் சான்றிதழை இலங்கை சிவில் விமானப் போக்குவரத்து ஆணையம் , டேவிட் பீரிஸ் ஏர்லைன்ஸ் நிறுவனத்திற்கு திங்கட்கிழமை (16) அன்று வழங்கியுள்ளது. இந்த விமானப் பயணம் 01 மணி நேரம் 20 நிமிடங்கள் எடுக்கும், மேலும் இதற்காக செஸ்னா-280 விமானம் தயாரிக்கப்பட்டுள்ளது. கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் உள்நாட்டு பயணிகளுக்கான முனையம் கட்டப்பட்டு வருகிறதுடன், அதன் பணிகள் முடிந்ததும், வெளிநாடுகளில் இருந்து வரும் பயணிகள் அங்கிருந்து யாழ்ப்பாணத்திற்கு பயணிக்க முடியும் என தெரிவிக்கப்படுகிறது. (ஐ)

## நாட்டில் சீரற்ற காலநிலை: பல பகுதிகளுக்கு விடுக்கப்பட்டுள்ள அபாய எச்சரிக்கை




நாட்டின் பல பகுதிகளுக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதனை தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் விடுத்துள்ளது. நிலை 01 இன் கீழ் வெளியிடப்பட்ட இந்த எச்சரிக்கை அறிவிப்பு இன்று மாலை 4 மணி முதல் நாளை (17) மாலை 4 மணி வரை நடைமுறையில் இருக்கும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, கொழும்பு மாவட்டத்தில் பாதுக்க, களுத்துறை மாவட்டத்தில் மத்துகம, அகலவத்த, வலல்லாவிட, பாலிந்தநுவர, புலத்சிங்கள ஆகிய பிரதேசங்களுக்கும் கண்டி மாவட்டத்தில் கங்கை கோறளை, கோகாலை மாவட்டத்தில் தெரிணியகல, யட்டியாந்தோட்டை, தெஹியோவிட்ட, நுவரெலியா மாவட்டத்தில் அம்பகமுவ, இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட, எஹலியகொட, பெல்மடுல்ல, எலபாத்த, கலவான, நிவித்திகல, அயகம, இரத்தினபுரி ஆகிய பிரதேச செயலக பிரிவுகளுக்குமே இவ்வாறு மண்சரிவு அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இன்று(16) பிற்பகல் 2.30 மணி வரையில், பலத்த காற்றுடன் கடல் கொந்தளிப்பாக இருக்கும் என வளிமண்டளவியல் திணைக்களம் சிவப்பு எச்சரிக்கை விடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## அதிரடி மாற்றம் கண்ட டொலர் பெறுமதி

கொழும்பு, ஜூன் 16

இலங்கை மத்திய வங்கி இன்றைய நாளுக்கான (16.06.2025) நாணயமாற்று விகிதங்களை வெளியிட்டுள்ளது.

அதன்படி, அமெரிக்க டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 295.75 ஆகவும் விற்பனைப் பெறுமதி 304.05 ஆகவும் பதிவாகியுள்ளது.

ஸ்ரேலிங் பவுண் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 399.27ஆகவும் விற்பனைப் பெறுமதி 413.39ஆகவும் பதிவாகியுள்ளது.

யூரோ ஒன்றின் கொள்முதல் பெறுமதி339.39 ஆகவும் விற்பனைப் பெறுமதி 352.22 ஆகவும் பதிவாகியுள்ளது.

கனேடிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 216.36 ஆகவும் விற்பனைப் பெறுமதி 224.87ஆகவும் பதிவாகியுள்ளது.

அவுஸ்திரேலிய டொலர் ஒன்றின் கொள்முதல் பெறுமதி 189.54 ஆகவும் விற்பனைப் பெறுமதி 199.25ஆகவும் பதிவாகியுள்ளது. (ஐ)



## ஓட்டமாவடி ஐ.ம.ச வசமானது

கோறளைப்பற்று மேற்கு ஓட்டமாவடி பிரதேச சபையின் தவிசாளர் தெரிவு திங்கட்கிழமை (16) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்ற இவ் அமர்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சபையை கைப்பற்றியுள்ளது.

இதில், ஓட்டமாவடி-2 ஆம்வட்டாரத்தில் ஐக்கிய மக்கள் சக்தியின் போட்டியிட்டு வெற்றி பெற்ற எம்.எச்.எம்.பைறூஸ் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின்க்கு ஆதரவளித்து தவிசாளராக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

அத்துடன், பிரதி தவிசாளராக மாஞ்சோலை - பதுரியா நகர் வட்டாரத்தில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் போட்டியிட்டு வெற்றி பெற்ற ஏ.எச்.நுபைர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தி 8 ஆசனங்கள் ஆதரவுடன் காணப்படுவதுடன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் 9 ஆசனங்கள் ஆதரவுடன் பிரதேச சபை ஆட்சியை கைப்பற்றியுள்ளது. (ஐ)

## அரசாங்கத்தின் சொகுசு வாகனங்கள் விற்பனைக்கு

கொழும்பு, ஜூன் 16



தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சகத்திற்குச் சொந்தமான 16 சொகுசு வாகனங்கள் மற்றும் 3 பிற வாகனங்களை விற்பனை செய்வதற்கான விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளன.

தோட்ட உட்கட்டமைப்பு அமைச்சு இது தொடர்பான அறிவித்தலை வெளியிட்டுள்ளது.

இந்த வாகனங்களுக்கு மேலதிகமாக, மூன்று பழைய வாகனங்களும் விற்பனைக்காக விடப்பட்டுள்ளன.

தொடர்புடைய வாகனங் களை விற்பனை செய்வதற்காக தகுதிவாய்ந்த விலைமனுதாரர்களிடம் இருந்து விலைமனுக்கள் கோரப்பட்டுள்ளதாக அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை குடிமக்கள் அல்லது இலங்கையில் பதிவுசெய்யப்பட்ட நிறுவனங்கள் அல்லது அமைப்புகள் மட்டுமே இந்த விலைமனுக்களை சமர்ப்பிக்க தகுதியுடையவர்கள் என்று அமைச்சு தெரிவித்துள்ளது. (ஐ)

# அரைவேக்காட்டு அறிக்கை அளந்து விடும் ரீல்கள்: மாறி மாறி தாக்கும் முதல்வர், இ.பி.எஸ்




“அரைவேக்காட்டு தனமாக அறிக்கை விடுகிறார் இ.பி.எஸ்., ” என முதல்வர் ஸ்டாலின் தெரிவித்து உள்ளார். இதற்கு, ” வாய்க்கு வந்த ரீல்களை முதல்வர் ஸ்டாலின் அளந்து விடுகிறார் என அ.தி.மு.க., பொதுச்செயலாளர் இ.பி.எஸ்., பதிலடி கொடுத்துள்ளார்.

தஞ்சாவூரில் நடந்த அரசு விழாவில் முதல்வர் ஸ்டாலின் பேசியதாவது: சோழ நாட்டின் காற்றை சுவாசிக்கும்போதே ஒரு கம்பீரம் பிறக்கிறது. காவிரி நீரைப் பெற பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தவர் கருணாநிதி. காவிரியில் தமிழகத்தின் உரிமையை நிலைநாட்டியது தி.மு.க.,தான். 2024ல் ரூ.70 கோடியில் மினி டைடல் பார்க் தஞ்சையில் திறக்கப்பட்டுள்ளது. கும்பகோணம்-மன்னார்குடி சாலைப் பணிகள் 90மூ முடிந்துள்ளன.

மக்கள் எவ்வளவு மகிழ்ச்சியாக இருக்கிறீர்கள் என்பதை நீங்கள் கொடுக்கும் வரவேற்பு வெளிப்படுத்துகிறது. இதனை எல்லாம் பார்த்து பொறுத்து கொள்ள முடியாமல், எதிர்க்கட்சி தலைவர் இ.பி.எஸ்., புலம்பி கொண்டு இருக்கிறார். தன்னுடைய உட்கட்சி பிரச்னையையும், கூட்டணி பிரச்னையையும் மறைப்பதற்காக, இன்றைக்கு அரசியல் அறிக்கை வெளியிட்டு கொண்டு இருக்கிறார்.

அந்த அறிக்கையை ஒழுங்காக செய்திகளை படித்து வெளியிடுகிறாரா? என்றால் அதுவும் கிடையாது. அரசு சார்பில் பத்திரிகை செய்தி கொடுக்கிறோம். அது உடனே டிவி நியூசில் வருகிறது. சோஷியல் மீடியாவில் வருகிறது. மறுநாள் எல்லா நியூஸ் பேப்பரிலும் வருகிறது. அப்போதும் செய்திகளை படிக்க மாட்டேன். பார்க்க மாட்டேன் என்று அடம்பிடித்து, அரைவேக்காட்டு தனமாக அறிக்கை விடுகிறார் இ.பி.எஸ்.,

அவருக்காக இல்லை என்றாலும் மக்களுக்காக, பதில் சொல்வது எனது கடமை. நான் பணியாற்றுவது உங்களுக்காக தான். மக்கள் அளிக்கும் ஒவ்வொரு மனு மீதும் எடுக்கப்படும் நடவடிக்கை கண்காணிக்கப்படுகிறது.

இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார். இந்த விழாவில், விவசாயிகளுக்கான குறுவை சிறப்பு தொகுப்பு திட்டத்தை முதல்வர் ஸ்டாலின் அறிவித்தார். இதனால் 8 லட்சம் விவசாயிகள் பயன் பெறுவர் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல்வர்ஸ்டாலினுக்கு பதில்அளித்து இ.பி.எஸ்., வெளியிட்ட அறிக்கை: தி.மு.க., ஆட்சியின் தவறுகளைச் சுட்டிக்காட்டும் எனது அறிக்கைகள் ஸ்டாலினை மிகவும் உறுத்துகிறது போல. ‘அரைவேக்காட்டுத் தனமாக’ இருக்கிறதாம் அவருக்கு. அரைவேக்காட்டுத் தனம் என்பது எது தெரியுமா முதல்வர் ஸ்டாலின் அவர்களே?

ஆட்சிப் பொறுப்பேற்ற நான்கு ஆண்டுகளில் கொடுத்த வாக்குறுதி எதையுமே நிறைவேற்றாமல், மக்கள் கடும் கோபத்தில் இருப்பது தெரிந்ததும், நான் அதை செய்யப் போகிறேன், இதை செய்யப் போகிறேன் என்று வாய்க்கு வந்த ரீல்களை அளந்து விடுகிறீர்களே- அது தான் அரைவேக்காட்டுத்தனம்.

தஞ்சைக்கு வந்த உங்களுக்கு எதிராக கருப்புக் கொடி காட்டிய விவசாயிகளை குண்டுக்கட்டாக போலீசார் கைது செய்துள்ளனர். இது என்ன மாடல்? பாசிச மாடல் தானே? நான் செய்தித் தாள்களைப் படிப்பது இல்லையாம். சொல்பவர் யார் தெரியுமா? முரசொலி தவிர எந்தப் பேப்பரையும் படிக்காத, படிக்க விரும்பாத முதல்வர்!

நாள்தோறும் நடக்கும் சட்டம் ஒழுங்கு சீர்கேடுகளும், பெண்களுக்கு எதிரான குற்றங்களும் செய்தித் தாள்களில் வருவது இல்லையா என்ன? இன்னும் சொல்லப் போனால், ஊடகம் மற்றும் பத்திரிகைச் செய்திகளின் அடிப்படையில் தானே என்னுடைய கருத்துகளை நான் தெரிவிக்கிறேன்?

எல்லா திட்டங்களிலும் கமிஷன் கணக்கு போட்டு பெட்டிகளில் அள்ளிக் கொண்டிருக்கும் உங்களுக்கு இருக்கும் ‘பெட்டி’ மோகத்தை என் பக்கம் திருப்ப வேண்டாம். உட்கட்சி, கூட்டணிப் பூசல் சத்தம் எல்லாம் அறிவாலயத்தில் இருந்து கேட்பதாகத் தானே செய்திகள் வருகின்றன? நீங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றவில்லை என்று உங்கள் கூட்டணிக் கட்சியினர் பேசி வருவது உங்களுக்குத் தெரியாதா? ஆக, ‘ஒன்றும் தெரியாத முதல்வர்’ என்ற என்னுடைய கூற்றை மீண்டும் மெய்ப் பித்துவிட்டார். இவ்வாறு இ.பி.எஸ்., கூறியுள்ளார். (ஐ)



# முத்தமிட முயன்றவரின் நாக்கை கடித்த பாம்பு: சமூக வலைதள மோகத்தால் விபரீதம்

உ.பி.,யில் ரீல்ஸ் வீடியோ வெளியிடும் ஆசையில், கொடிய விஷமுள்ள பாம்பிற்கு முத்தமிட முயன்றவரை, அந்தப் பாம்பு கடித்து விட்டது. அவர் ,ப்போது ஆபத்தான நிலையில் உயிருக்கு போராடி வருகிறார்.

உ.பி., மாநிலம் அம்ரோஹா மாவட்டத்தில் உள்ள ஹைபத்பூர் கிராமத்தை சேர்ந்த விவசாயி ஜிதேந்திர குமார் 50, ,வர் கடந்த வெள்ளிக்கிழமை அன்று, சமூக ஊடகத்தில் புகழ் பெற வேண்டும் என்று எண்ணி, ஒரு கொடிய விஷமுள்ள பாம்பை பிடித்து அதனுடன் இருந்தபடி வீடியோ எடுத்து படமாக்கினார்.

இதை அருகில் ,ருந்தவர்களும் வீடியோ எடுத்தனர். அந்த வீடியோவில் ஜிதேந்திர குமார் பாம்பை தனது கழுத்தில் சுற்றிக்கொண்டு மெதுவாக அதன் தலை மீது வாயை நீட்டிய போது அவரது நாக்கில் பாம்பு கடித்தது. ,தை கண்டவர்களுக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியது.

கடித்த பிறகு குமாரின் உடல்நிலை வேகமாக மோசமடைந்தது. அவர் அருகிலுள்ள மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டு, பின்னர் மொராதாபாத்தில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனைக்கு அனுப்பப்பட்டார். அங்கு ஐ.சி.யூ.,வில் உள்ள அவரது உடல்நிலை இன்னும் கவலைக்கிடமாக உள்ளது.

போலீசில் பணியாற்ற விருப்பம் ,ல்லை மணிமுத்தாறு பட்டாலியன் எஸ்.பி., ராஜினாமா!

இது குறித்து கிராமத் தலைவர் ஜெய்கிராத் சிங் கூறியதாவது:

சில தினங்களுக்கு முன் ஒரு சுவரில் ,ருந்து ஒரு பாம்பு வெளியே வந்தது, ,தனால் அங்குள்ளவர்கள் பீதி அடைந்தனர்.சம்பவ ,டத்திற்கு வந்த ஜிதேந்திர குமார், பாம்பைப் பிடித்தார்.

அவர் பாம்பை முத்தமிட முயன்றார். ஆனால் அவரது பிடி தளர்ந்ததால், பாம்பு அவரது நாக்கில் கடித்தது. அதிர்ச்சியடைந்த அவர், பாம்பை அருகிலுள்ள புதர்களுக்குள் கைவிட்டார்.

இவ்வாறு ஜெய்கிராத் சிங் கூறினார்.

இது பார்வையாளர்களிடமிருந்து கடுமையான விமர்சனங்களை பெற்றது. (ஐ)

# மருத்துவத் துறையின் சீரழிவுக்கு தி.மு.க., அரசு தான் பொறுப்பு அன்புமணி



மருத்துவப் பணியாளர்களை போதிய அளவில் நியமிக்க வேண்டிய தமிழக அரசு, அதைச் செய்யாமல் வீண் விளம்பரங்களிலும், பொய்ப்பரப்புரைகளிலும் மட்டும் தான் ஈடுபட்டு வருகிறது,’ என்று பா.ம.க., செயல் தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

அவரது அறிக்கைதிருப்பூர்மாவட்டம் மடத்துக்குளம்அரசுமருத்துவமனையில் காலில் அடிபட்டு காயத்துடன் வந்த நோயாளி ஒருவருக்கு அங்கு பணியாற்றும் துப்புரவுப் பணியாளர் ஒருவரே மருத்துவம் அளித்த காட்சி காணொலியாக வலம் வருவது அதிர்ச்சியளிக்கிறது. தமிழகத்தில் அரசு மருத்துவமனைகள் எத்தகைய அவல நிலையில் உள்ளன என்பதற்கு இந்த காணொலி தான் சான்று ஆகும்.

ஊராட்சிகளில்பொது சுகாதாரம் கேள்விக்குறி: போதிய தூய்மை பணியாளர்கள் இன்றி தவிப்பு

காயமடைந்த நோயாளிக்கு தூய்மைப் பணியாளர்மருத்துவம்அளிக்கவில்லைஏற்கனவே போடப்பட்ட கட்டை மட்டும் தான் பிரித்தார் என மருத்துவமனை தரப்பில் அளித்துள்ள விளக்கம் அபத்தமானது. நோயாளிகளூக்கு கட்டை பிரிப்பது தூய்மைப் பணியாளரின் வேலை அல்ல. அந்தப் பணியை பயிற்சி பெற்ற மருத்துவப் பணியாளர் தான் மேற்கொள்ள வேண்டும். தூய்மைப் பணிகளை மேற்கொண்ட பணியாளர் ஒருவர், அப்படியே நோயாளிக்கு மருத்துவம் அளித்தால் சம்பந்தப்பட்ட நோயாளிக்கு நோய்த்தொற்று ஏற்படும் ஆபத்துகள் உள்ளன. இவற்றை அறிந்திருந்தும் ஒரு நோயாளிக்கு தூய்மைப்பணியாளர் மூலம் சிகிச்சையளிக்கச் செய்திருப்பது கண்டிக்கத்தக்கது.

தமிழகம்முழுவதும்அரசுமருத்துவமனைகளில் மருத்துவர்கள் மற்றும் மருத்துவப் பணியாளர்களுக்கு கடும்பற்றாக்குறை நிலவுவது தான் சிக்கலுக்குக் காரணம் ஆகும். மருத்துவப் பணியாளர்களை போதிய அளவில் நியமிக்க வேண்டிய தமிழக அரசு, அதைச் செய்யாமல் வீண் விளம்பரங்களிலும், பொய்ப்பரப்புரைகளிலும் மட்டும் தான் ஈடுபட்டு வருகிறது.


ஒரு காலத்தில் ஒட்டுமொத்த இந்தியாவுக்கும் முன்னுதாரணமாக இருந்த தமிழக மருத்துவத்துறை இப்போது சீரழிவுப் பாதையில் பயணித்துக்கொண்டிருக்கிறது. இதற்கு தி.மு.க., அரசுதான்பொறுப்பேற்க வேண்டும். உயிர்க்காக்கும் துறையில் அலட்சியமாக செயல்படுவதை விடுத்து மருத்துவத் துறையில் காலியாக உள்ள அனைத்துப் பணியிடங்களையும் நிரப்ப தமிழக அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும், இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது

(ஐ)

# பெண்களும் சமூக அங்கீகாரமும்!







இந்த உலகில் பிறக்கும் ஒவ்வொரு குழந்தையின் அடிப்படை எதிர்பார்ப்பு சமூகத்தில் ஒருவராக ஏற்றுக்கொள்ளப்படுதல் என்பதே. அதீத சாதிப் பற்று கொண்ட சென்ற தலைமுறை ஆட்களோ அல்லது அத்தனைக்கும் ஸ்டோரி வைக்கும் இன்ஸ்டா தலைமுறையோ, இவர்களின் அடிப்படைத் தேவை சமுதாயத்தில் தன் இருப்பை உறுதிப்படுத்துவதும், அதைச் சமூகம் அங்கீகரிப்பதுமே. ஒரு புதிய உயிர் பிறக்கும்போது அதன் எதிர்பார்ப்பு உணவும் பாதுகாப்பும் மட்டுமே. அது எந்த வரவேற்பையும் எதிர்பார்ப்பதில்லை. ஆனால், வளர்ந்தவுடன் அது தன் அடையாளத்திற்கும், இருப்பிற்கும் சமூக அங்கீகாரம் தேடி நிற்கிறது. இது மனிதராகத் தன்னை உணர்வதற்கான அடிப்படை உரிமை என்று கூறலாம். ஆனால், அதுகூடப் பாலின அடிப்படையில் வடிக்கட்டிதான் சமுதாயத்தால் வழங்கப்படுகிறது. ஆணாகப் பிறந்துவிட்டாலே அள்ளித் தரப்படும் இந்த அங்கீகாரம் பெண்களுக்குக் கிடைப்பது அவ்வளவு எளிதல்ல.

ஆண் குழந்தையின் ஆசைகள், சுதந்திரம், தேர்வுகள் போன்றவை பெரும்பாலான நேரத்தில் கேள்வியின்றி ஏற்றுக்கொள்ளப்படுவதோடு, கூடுதலாக உற்சாகமும் ஊக்கமும் வழங்கப்படுகின்றன. ஆனால், பெண் குழந்தைக்கு அந்த அங்கீகாரம் பெரும்பாலும் எளிதில் கிடைப்பதில்லை அதை அடைய வேண்டும் என்பதே ஒரு தொடர் முயற்சியாகவே அமைந்துவிடுகிறது.

மாநிறத்தில் பருவ வயதில் இருக்கும் ஆண்களிடம் யாரும் தன் நிறத்தைப் பற்றிக் கவலை கொள்ளும் விதமாகப் பேசுவதில்லை. என்ன இருந்தாலும் ஆண் சிங்கம் என்று தலையிலேற்றி வைக்கிறார்கள். ஆனால், பெண் குழந்தை என்றால் கல்யாணச் சந்தையில் விலை போகா சரக்காகக் கவனத்தில் கொள்ளப்பட்டு ஆலோசனைகள் அள்ளித் தெளிக்கப்படுகின்றன. தன் நிறத்தைக் குறித்த தாழ்வு மனப்பான்மையுடனே வளரும் இந்தப் பிள்ளைகள் வாழ்க்கையில் சமூகத்தின் அங்கீகாரத்திற்காகப் போராடுவதற்குத் தள்ளப்படுகின்றனர்.

இந்தச் சமூக அங்கீகாரத்தைப் பெற பெண் குழந்தைகள் மேற்கொள்ளும் பயணம் சீரானதல்ல. அது மிக நுட்பமான வலையினால் பின்னப்பட்டது. இந்தப் பயணத்தின் வழியே, சாதியின் மூலம் பின்னப்பட்ட பாரம்பரியம், மதங்களின் வழியே கடத்தப்படும் பெண்ணடிமைத்தனங்கள் என்று எதையும் கேள்வி கேட்காமல் ஏற்றுக் கொள்ளும் பெண்கள் கடைசி வரை என்ன செய்தாலும் கிடைக்காத அந்தச் சமூக அங்கீகாரத்திற்காகக் கையேந்திதான் நிற்கிறார்கள்.

உடுத்தும் உடையிலிருந்து உட்காரும் முறை வரை பெண்களுக்கு என்று தனி அகராதியையே கண்டறிந்து வைத்திருக்கும் சமூகம், அவை அனைத்தையும் திருமணம் மற்றும் பிள்ளைப் பேற்றில் கொண்டு சென்று முடிந்து வைக்கும். பெண்களாகப் பிறவி எடுப்பதன் நோக்கமே திருமணமும் பிள்ளைப் பேறும் மட்டுமே என்று திரும்பத் திரும்ப சொல்லி, இதன் மூலமே பெண்களுக்குச் சமூக அங்கீகாரம் கிட்டும் என்கிற பிம்பத்தைக் கட்டமைக்கின்றனர். பேசும் மொழி, சிரிக்கும் அளவு, வெளியே செல்ல வேண்டிய இடம் மற்றும் நேரம் இப்படி அனைத்துக்குமே பெண்களுக்கு என்று ஓர் அளவீடு உள்ளது. இந்த அளவீடுகளை மீறும் பெண்களுக்குச் சமூக அங்கீகாரம் மொத்தமாகவே மறுக்கப்படுகிறது.

இத்தகைய அளவீடுகளில் தாங்கள் அடைக்கப்பட்டதைப் பெண்கள் உணர்ந்துகொள்ளும்போது அதை விட்டு வெளியேறும் முயற்சிகளை எடுக்கின்றனர். ஒவ்வொரு முறை இத்தகைய முயற்சிகளைப் பெண்கள் மேற்கொள்ளும்போதும், பாரம்பரியம், குடும்பக் கட்டுப்பாடு, பெண்களுக்கு என்றே எழுதி வைக்கப்பட்டிருக்கும் ஒழுக்க விதிகள் இவை எல்லாவற்றையும் சிலபஸ் ஆக்கி மொத்த சமுதாயமும் சேர்ந்து பாடம் எடுக்கும். நீ இதன் மூலம் சமூகத்தின் அங்கீகாரத்தைப் பெறவே முடியாது என்று பயமுறுத்தும். கடலில் அலைகள் உருவாகும் இடத்தை ஆழி என்பார்கள். ஆழியைத் தாண்டுவது கடினம்தான். ஆனால், தாண்டிவிட்டால் மொத்த கடலையும் அனுபவிக்கலாம்.





இப்படி வாழ்க்கைக் கடலை அனுவிக்க ஆழி தாண்டிய பெண்கள் நம்மிடையே வெற்றிகரமாக வாழ்ந்து கொண்டுள்ளனர். அதற்கான ஒரு சமீபத்திய உதாரணமாக எழுத்தாளர் சல்மாவைச் சொல்லலாம். பதிமூன்று வயதில் தோழிகளுடன் சென்று திரைப்படம் பார்த்த காரணத்திற்காகப் படிப்பு நிறுத்தப்பட்டு, பதினேழு வயதில் திருமணம் செய்துவைக்கப்பட்டார். குடும்ப வாழ்க்கையில் தன்னுடைய ஆசைகளையும், தனித்துவத்தையும் ஒதுக்கி வைத்த ஒரு பெண், மீண்டும் தன்னைத்தானே எழுத்தின் மூலமாக கண்டறிகிறார். கவிதைகளும் கட்டுரைகளும் அவர் வாழ்வியல் அனுபவங்களையும், பெண்களின் சமூக நிலையையும் படம்பிடித்துக் காட்டுகின்றன. தொடர் எழுத்துப்பணி அவரை, மக்கள் பணி என்னும் தளத்திற்கு உயர்த்தியது. இன்று மாநிலங்களவையில் மக்களின் பிரதிநிதியாக உயர்ந்து நிற்க தன்னைத் தயார்படுத்திக் கொண்டுள்ளார்.

சல்மாவைப்போல இன்னும் எத்தனையோ சாதாரணப் பெண்கள், இயல்பான உடை அணிந்ததற்காக, ஆண் நண்பருடன் பேசிக்கொண்டிருந்த காரணத்திற்காக, தனியாக சினிமா பார்த்ததற்காக, சுற்றுலா சென்றதற்காக, தன் தலைமுடியைத் தன் விருப்பம்போல வெட்டிக் கொண்ட காரணங்களுக்காகவெல்லாம் படிப்பு நிறுத்தப்பட்டு திருமணம் செய்து வைக்கப்பட்டிருக்கிறார்கள். இது போன்று ஒரு கதையை ஆண்களால் கூற முடியுமா?

சமூக அங்கீகாரத்தை அடையப்பெண்கள் மேற்கொள்ளும் இந்தப் பயணம், வெறும் தனிப்பட்ட போராட்டமல்ல. அது அடுத்து வரும் ஒவ்வொரு தலைமுறையையும் பாதிக்கும் அடுக்கடுக்கான சமூகவியல் பிணைப்புகளுக்குள் சிக்கிய கதை. இப்போதும் பல பெண்கள், 'நீ யாராக இருக்க விரும்புகிறாய்' என்கிற கேள்விக்குப் பதில் சொல்லும் முன், 'நீ யாராக இருக்கக் கூடாது' என்கிற நீண்ட பட்டியலைச் சமூகம் அச்சடித்து கையில் வழங்குகிறது. ஒரு பெண் இயல்பான வாழ்வையும், விருப்பங்களையும் தேர்ந்தெடுப்பதற்காகப் போராடும்போது, அதைத் தடுமாற்றம் என்றே பெயரிடுகிறது சமூகம். ஆனால், அந்தத் தடுமாற்றமே ஒரு புதிய பாதையைத் திறக்கிறது. அந்தப் பாதையில் செல்வது சுலபமல்ல் வழியில் அவமானமும் எதிர்ப்பும் பல நேரத்தில் தனிமையும் நிறைந்திருக்கும். ஆனால், அந்தப் பயணத்தின் முடிவில் அவர் சந்திக்கிற ஒவ்வொரு பெண்ணுக்கும் வழிகாட்டும் ஒளியாக மாறுகிறார்.

சமூகத்தின் இந்தப் பிம்பங்களை உடைக்க ஆரம்பிக்கும் பெண்கள்தான் மாற்றத்திற்கான விதையை விதைப்பவர்கள். அவர்கள் சமூகத்திற்குச் சொல்ல விரும்பும் செய்தி, 'நான் யாரென்பதை சமூகம் தீர்மானிக்காது. அதை நான்தான் தீர்மானிக்கிறேன்.' உள்ளிலிருந்து உருவாகும் இந்த உறுதியில்தான் மாற்றத்திற்கான முன்னோட்டம் உருவாகிறது. அது முழுமையடையும் போது, வெளியில் இருந்து வழங்கப்படும் எந்த ஓர் அங்கீகாரத்தையும் அது வேண்டி நிற்பதில்லை.

அந்த உறுதி உருவாக, பெண்களுக்கு ஒரு பாதுகாப்பான சூழல், ஊக்கம், முன்னோடிகள் தேவைப்படுகின்றனர். இன்று பள்ளிகளிலும், வேலைதளங்களிலும், சமூக ஊடகங்களிலும் பெண்கள் தங்கள் உணர்வுகளையும் எணணங்களையும் பரவலாகத் திறந்த வெளியில் பகிர ஆரம்பித்துள்ளனர். இது ஒரு புதிய சிந்தனைப் போக்கின் தொடக்கமே. இந்தத் தொடக்கத்தின் அடுத்த நிலை, தங்களை நோக்கி வீசப்படும் சமூகக் கட்டுப்பாடுகளை எதிர்த்துக் கேள்வி எழுப்புவது.

பெண்கள் தங்கள் வாழ்வில் கட்டுப்பாடுகளை மீறி, சுய தேர்வுகளை மேற்கொள்ளும் விதம், சமுதாயத்தின் விருப்பத்திற்கேற்ப அல்லாமல், தங்களின் விருப்பத்திற்கேற்ப அமைய வேண்டும் என்பதுதான் பெண்ணுரிமை பேசுபவர்களின் குரலாக இருக்கிறது. தங்கள் வாழ்க்கையின் கட்டுப்பாடுகளை நிர்ணயிக்க நினைக்கும் ஒவ்வொரு சமூகக் கட்டமைப்பிற்கும் எதிராக, தங்கள் சுய விருப்பத்தைக் குரலாக எழுப்ப வேண்டியது ஒவ்வொரு பெண்ணிற்கும் அவசியமாகிறது. மெதுவாகவும் மிகவும் உறுதியாகவும் இந்தப் புரட்சியின் குரல் காலம் காலமாகச் சமுதாயத்தில் ஒலித்துக் கொண்டேதான் இருக்கிறது. இந்தக் குரல்கள் வேதனையுடன் தொடங்கினாலும், முடிவில் நம்பிக்கையையும் வழிகாட்டுதலையும் தருவதோடு மட்டுமல்லாமல் நாளைய பெண்களுக்கு ஒளிவிளக்காக இருக்கும்.

உண்மையான சமூக அங்கீகாரம் என்பது பெண்கள் தங்கள் அடையாளத்தையும் உரிமையையும் தாமாகவே நிர்ணயிக்கும் போதுதான் ஆரம்பிக்கிறது. இந்த மாற்றத்தின் தொடக்கம், அவர்களுடைய குரல்களையும் தேர்வுகளையும் மதிப்பது என்பதில்தான் ஆரம்பிக்கிறது. இப்படி ஒரு ஆரம்பப் புள்ளியை சமூகத்தில் உள்ள ஒவ்வொரு குடும்பமும் வைக்க வேண்டும்.

# அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகும் ஈரான்



இஸ்ரேல், ஈரான் இடையே எழுந்துள்ள போர் தீவிரம் அடைந்துள்ளது, உலக நாடுகள் இடையே கவலையை ஏற்படுத்தி இருக்கிறது. பரஸ்பரம் இரு நாடுகளும் மேற்கொண்டு வரும் வான்வழி தாக்குதலில் ஏராளமானோர் கொல்லப்பட்டுள்ளனர்.

அமைதி பேச்சுவார்த்தைக்கு ஈரான் மறுத்துவிட்டதோடு, இஸ்ரேல் நடத்தி வரும் அதிரடி தாக்குதல்களுக்கு பதிலடி கொடுக்கப்படும் என்றும் அறிவித்துள்ளது. இந் நிலையில், அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் இருந்து விலகுவதற்காக மசோதாவை தயாரிக்க ஈரான் பார்லிமெண்ட் தயாராகி வருகிறது.

இதனை ஈரான் வெளியுறவு அமைச்சர் இஸ்மாயில் பகாயி உறுதிப்படுத்தி உள்ளார். ஆனாலும் பேரழிவு ஆயுதங்களை டெஹ்ரான் தயாரிப்பதை எதிர்த்து வருவதாக தெரிவித்துள்ளார். அதே நேரத்தில் அந்நாட்டு அதிபர் மசூத் பெசேஷ்கியன் கூறுகையில், ஈரானுக்கு அணு ஆயுதங்களை தயாரிக்கும் எண்ணம் இல்லை, ஆனால் அணுசக்தி மற்றும் ஆராய்ச்சிக்கான உரிமையை தொடர்ந்து வலியுறுத்தும் என்று கூறினார்.

அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தம் என்பது அணு ஆயுதங்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய நொழில்நுட்பங்களின் பரவலை தடுப்பது, அமைதியான மற்றும் ஆக்கப்பூர்வ முறையில் அணு ஆயுதத்தை பயன்படுத்துவதில் முழு ஒத்துழைப்பை அளிப்பது போன்றவற்றை நோக்கமாக கொண்டதாகும். இது ஒரு சர்வதேச ஒப்பந்தமும் கூட.

1970 முதல் இந்த ஒப்பந்தம் நடைமுறையில் உள்ளது. கிட்டத்தட்ட 191 நாடுகள் இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுள்ளன. ஆனால் தெற்கு சூடான், இந்தியா, பாகிஸ்தான் மற்றும் இஸ்ரேல் ஆகிய நாடுகள் அணு ஆயுத பரவல் தடை ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை. 2003ம் ஆண்டு இந்த ஒப்பந்தத்தில் இருந்து வடகொரியா விலகியது, குறிப்பிடத்தக்கது. (ஐ)

# முற்றியது மோதல் இஸ்ரேலில் ஈரான் தாக்குதலில் அமெரிக்க துணை தூதரகம் சேதம்!



இஸ்ரேல்-ஈரான் இடையே மோதல் அதிகரித்துள்ளது. இஸ்ரேல் தாக்குதலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் ஈரான் தாக்குதல் நடத்தி வருகிறது. இஸ்ரேல், ஈரான் இடையேயான போர் தீவிரமடைந்துள்ளது. இருநாடுகளும் பரஸ்பரமாக வான்வழி தாக்குதலை நடத்தி வருகின்றன. இதுவரையில் ஈரானில் 230 பேரும், இஸ்ரேலில் குழந்தைகள் உள்பட 10 பேரும் கொல்லப்பட்டுள்ளனர். டெல் அவிவில் ஈரான் நடத்திய ஏவுகணை தாக்குதலில் அமெரிக்க துணை தூதரகம் சேதம் அடைந்துள்ளது. இதனால் தற்காலிகமாக மூடப்பட்டுள்ளது. இது குறித்து அமெரிக்க தூதர் மைக் ஹக்கபி கூறியதாவது:

இஸ்ரேலில் உள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் துணைத் தூதரகம் இன்று தற்காலிகமாக மூடப்பட்டு உள்ளது. டெல் அவிவ் நகரில் அமைந்துள்ள அமெரிக்க துணை தூதரகம் அருகே ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களால் சிறிய சேதங்கள் ஏற்பட்டன. ஆனால் அமெரிக்க தூதரக அதிகாரிகள் யாருக்கும் காயம் ஏற்படவில்லை. இவ்வாறு அவர் கூறினார். (ஐ)



# முழு பதிலடி கொடுப்போம் போர் நிறுத்த பேச்சுவார்த்தையை ஏற்க ஈரான் மறுப்பு

இஸ்ரேல் மற்றும் ஈரான் இடையிலான போர் 4வது நாளாக நீடித்து வருகிறது. ஈரானில் உள்ள அணுசக்தி மையங்கள் மற்றும் ராணுவ தலைமையகத்தை குறிவைத்து தாக்குதல் நடத்தி வருகிறது. ஒரே இரவில் 80 நிலைகளை குறி வைத்து தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், ஈரானின் அணுசக்தி விஞ்ஞானிகள் மற்றும் ராணுவ கமென்டர்கள் உயிரிழந்தனர்.

மேலும், ஈரானின் முக்கிய தலைவர் அயதுல்லா அலி காமேனி கொல்ல இஸ்ரேல் திட்டமிட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. ஆனால், இதற்கு அமெரிக்க அதிபர் டிரம்ப் எதிர்ப்பு தெரிவித்துள்ளதாக அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதுவரையில் ஈரானில் 230 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் 90 சதவீதம் பேர் பொதுமக்கள் என்று ஈரான் கூறியுள்ளது. அதேபோல, இஸ்ரேலில் குழந்தைகள் உள்பட 10 பேர் கொல்லப்பட்டுள்ளனர்.

இஸ்ரேல், ஈரான் இடையே ஒப்பந்தம் செய்து போரை நிறுத்த வேண்டும் என்று அமெரிக்க அதிபர் டிரம்ப் வலியுறுத்தி வருகிறார். மேலும், மத்தியஸ்த நாடுகளான கத்தார் மற்றும் ஓமனும், பேச்சுவார்த்தை நடத்துமாறு ஈரானை அறிவுறுத்தின. ஆனால், இதனை ஏற்க ஈரான் மறுப்பு தெரிவித்துள்ளது.

இஸ்ரேலின் தாக்குதல்களுக்கு முழுமையான பதிலடி கொடுத்த பிறகே, பேச்சுவார்த்தை நடத்துவது குறித்து முடிவு செய்யப்படும் என்று ஈரான் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். இருநாடுகளுக்கு இடையிலான போர் நீடித்தால், கச்சா எண்ணெய் விலை உயரும் அபாயம் ஏற்பட்டுள்ளது. (ஐ)

# சுற்றுலா பயணியர் வருகையை குறைக்க நார்வேயில் புதிய வரி



ஐரோப்பிய நாடான நார்வே, உலகின் மிக அழகான இயற்கைக் காட்சிகள் நிறைந்த நாடுகளில் ஒன்றாகும். இதனால் ஆண்டுதோறும் 50 லட்சத்துக்கும் மேற்பட்ட சுற்றுலா பயணியர் நார்வேவுக்கு படை எடுக்கின்றனர்.

இவர்களால் நாட்டின் இயற்கைச் சூழல் மற்றும் உள்ளூர் சமூகங்களுக்கு பாதிப்பு ஏற்படுவதாக புகார் எழுந்தது. எனவே சுற்றுலா பயணியர் எண்ணிக்கையை கட்டுப்படுத்த அரசு முடிவு செய்துள்ளது.

இதற்காக சுற்றுலா வரியை, அடுத்தாண்டு ஜூனில் அறிமுகப்படுத்த உள்ளனர். அதன்படி தங்குமிடங்கள், கப்பல் பயணங்கள், மற்றும் பிற சுற்றுலா சேவைகளை பயன்படுத்தும் போது, கட்டணத்துடன் சேர்த்து 3 சதவீத சுற்றுலா வரி வசூலிக்கப்படும்.

இந்த வரியால் கிடைக்கும் வருவாயை சுற்றுச்சூழல் பாதுகாப்பு, உள்ளூர் உட்கட்டமைப்பு மேம்பாடு மற்றும் கழிப்பறை போன்ற பொது சேவைகளுக்கு பயன்படுத்த உள்ளனர்.


இத்தாலி, பிரான்ஸ் மற்றும் நியூசிலாந்து போன்ற பிற ஐரோப்பிய நாடுகளின் பிரபல சுற்றுலா தலங்களில், ஏற்கனவே இது போன்ற வரி வசூலிப்பு நடைமுறையில் உள்ளது. (ஐ)

# இஸ்ரேல் – ஈரான் சண்டை: பெட்ரோல் விலை உயரும்?

இஸ்ரேல், ஈரான் போர் பதற்றத்தால் தகிக்கிறது கச்சா எண்ணெய் விலை

நாளொன்றுக்கு 15 முதல் 20 லட்சம் பேரல்கள் கச்சா எண்ணெய் ஈரானில் இருந்து ஏற்றுமதியாகிறது. தற்போது நடந்து வரும் சண்டையால் இந்த ஏற்றுமதி பாதிக்கப்படும். இதை ஈடு செய்ய ஒபெக் எனப்படும் எண்ணெய் உற்பத்தி நாடுகள் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

அதில் பிரச்னை ஏற்பட்டால் தற்போது கச்சா எண்ணெய் விலை பீப்பாய் ஒன்றுக்கு 73 டாலராக இருப்பது 90 டாலர் வரை அதிகரிக்கும் என பொருளாதார நிபுணர்கள் கணித்துள்ளனர். இவ்வாறு உயர்ந்தால், உலகெங்கும் பெட்ரோல், டீசல் விலை உயரும்.



## கொழும்பு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரீஸா சரூக்கும் போட்டியிட்டனர்.

இந்நிலையில், கொழும்பு மாநகர சபையின் மேயராகத் தேசிய மக்கள் சக்தியின் விராய் கெலி பல்தசார் 61 வாக்குகளைப் பெற்றுத் தெரிவாகியுள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட ரீஸா சரூக் 54 வாக்குகளை மாத்திரம் பெற்றனர்.

கொழும்பு மாநகர சபையில் 117 உறுப்பினர்கள் உள்ளனர். இரகசிய வாக்கெடுப்பில் 115 வாக்குகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன. 2 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன.

அதேவேளை, கொழும்பு மாநகர சபையின் பிரதி மேயராகத் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஹேமந்த குமார தெரிவு செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அதேவேளை, ஜனநாயகத் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த பரமேஸ்வரன் கார்த்தீபன் பிரதி மேயராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வவுனியா மாநகர சபைக்கான முதலாவது மேயர் மற்றும் பிரதி மேயர் தெரிவு, வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு தலைமையில், வவுனியா மாநகர சபையின் ஒன்றுகூடல் மண்டபத்தில் இன்று முற்பகல் நடைபெற்றது.

இதன்போது மேயர் தெரிவு மற்றும் பிரதி மேயர் தெரிவு பகிரங்க வாக்களிப்பின் மூலம் நடத்தப்பட்டன. அந்தவகையில் சங்குக் கூட்டணியின் சார்பில் போட்டியிட்ட சுந்தரலிங்கம் காண்டீபனுக்கு ஆதரவாக 11 வாக்குகளும், தேசிய மக்கள் சக்தியின் சார்பில் போட்டியிட்ட சிவசோதி சிவசங்கருக்கு 10 வாக்குகளும் கிடைக்கப் பெற்றன.

இதனடிப்படையில் சங்குக் கூட்டணியைச் சேர்ந்த காண்டீபன் புதிய மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்துப் பிரதி மேயருக்கான தெரிவு இடம்பெற்றது. பிரதி மேயராக ஜனநாயகத் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட பரமேஸ்வரன் கார்த்தீபனுக்கு ஆதரவாக 11 வாக்குகளும், சுயேச்சைக் குழுவைச் சேர்ந்த சிவசுப்பிரமணியம் பிரேமதாஸ /க்கு ஆதரவாக 10 வாக்குகளும் அளிக்கப்பட்டன.

இதனையடுத்து ஜனநாயகத் தேசியக் கூட்டணியின் உறுப்பினர் பரமேஸ்வரன் கார்த்தீபன் பிரதி மேயராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

ஆளும் கட்சி சார்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி, ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ், ஐக்கிய மக்கள் சக்தி, ஜனநாயகத் தேசியக் கூட்டணி என்பன இணைந்து ஆட்சி அமைத்துள்ளன.

## ஏறாவூர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தெரிவு செய்யும் நிகழ்வு இன்று திங்கட்கிழமை கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் ஏ.எல்.எம்.அஸ்மி தலைமையில் இடம்பெற்றது.

தவிசாளர் தெரிவுப் போட்டியில் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் எம்.எஸ்.சமீம், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் சார்பில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் தற்போதைய நகர சபை உறுப்பினருமான முஹம்மட் சாலி நழீம் போட்டியிட்டனர்.

தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் ஒருவர் பிரசன்னமாக நிலையில் 16 பேருடன் தவிசாளர், உப தவிசாளர் தெரிவுகள் பகிரங்க வாக்கெடுப்பு மூலம் நடைபெற்றன.

இதன்போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சார்பாகப் போட்டியிட்ட எம்.எஸ்.நழீமுக்கு ஆதரவாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த 7 உறுப்பினர்களும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும், இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும் என மொத்தமாக 9 உறுப்பினர்கள் வாக்களித்தனர்.

ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த எம்.எஸ். சமீமுக்கு ஆதரவாக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த 4 உறுப்பினர்களும், தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியைச் சேர்ந்த 2 உறுப்பினர்களும், ஐக்கிய மக்கள் சக்தியைச் சேர்ந்த ஓர் உறுப்பினரும் என 7 உறுப்பினர்கள் வாக்களித்தர்

இதன் பிரகாரம் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த எம்.எஸ். நழீம் 2 மேலதிக வாக்குகளால் வெற்றி பெற்று தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

அதனைத் தொடர்ந்து பிரதி தவிசாளர் பதவிக்குப் போட்டியிட்ட ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஞானசேகரன் கஜேந்திரன் 9 வாக்குகளையும், ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த கே.எம்.எம். அன்வர் 7 வாக்குகளையும் பெற்றனர். அதற்கமைய தமிழ்த் தேசியக் கூட்டணியைச் சேர்ந்த ஞானசேகரன் கஜேந்திரன் பிரதி தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இந்த நிகழ்வில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் ஏ.எல்.எம்.ஹிஸ்புல்லா, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் உட்பட கட்சி ஆதரவாளர்கள் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வவுனியா தெற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருமதி தேவநந்தினி பாபு தலைமையில், பிரதேச சபை மண்டபத்தில் இன்று பிற்பகல் நடைபெற்றது.

இதன்போது தவிசாளர் தெரிவுக்கு இருவரது பெயர்கள் பிரேரிக்கப்பட்டன. தேசிய மக்கள் சக்தி சார்பில் சுதர்சன சாமர வீரக்கோன் மற்றும் சுயேச்சைக் குழு சார்பில் கசுன் சுமதிபால ஆகியோரின் பெயர்கள் பிரேரிக்கப்பட்டன.

இதன்போது இந்தத் தெரிவை இரகசிய வாக்கெடுப்பின் மூலம் நடத்துமாறு 10 பேரும், பகிரங்கமாக நடத்துமாறு 7 பேரும் வாக்களித்தனர்.

பெரும்பான்மை வாக்குகளின் அடிப்படையில் தவிசாளர் தெரிவு இரகசிய வாக்களிப்பின் மூலம் நடத்தப்பட்டது.

வாக்களிப்பு முடிவுகளின்படி தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினருக்கு 12 வாக்குகள் கிடைக்கப்பெற்றன. சுயேச்சைக் குழு உறுப்பினருக்கு 5 வாக்குகள் கிடைக்கப்பெற்றன.

அதன்பிரகாரம் தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர் சுதர்சன சாமர வீரக்கோன் தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

இதனையடுத்து உப தவிசாளருக்கான தெரிவு இடம்பெற்றது. உப தவிசாளராக ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர் குணபால சரத்மதுவின் பெயர் தேசிய மக்கள் சக்தி உறுப்பினர்களால் பிரேரிக்கப்பட்டது.

வேறு உறுப்பினர்களின் பெயர்கள் பிரேரிக்கப்படாமையினால் போட்டியின்றி அவர் உப தவிசாளராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## அநுர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நெருக்கடியிலிருந்து மீள, வழிகாட்டிய சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து வழங்கிய ஆதரவுக்கு ஜனாதிபதி நன்றி தெரிவித்தார்.

அமெரிக்கா அண்மையில் விதித்த வரிகளைப் பற்றிக் குறிப்பிட்ட ஜனாதிபதி அநுரகுமார, இலங்கையின் மொத்த ஏற்றுமதியில் சுமார் 25மூ அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுவதால், அவ்வாறு வரி அதிகரிப்பதால் ஏற்படக்கூடிய தாக்கத்தையும் குறிப்பிட்டார்.

உலகளாவிய நெருக்கடிகள் காரணமாக இலங்கை எதிர்கொள்ளும் சவால்கள் மற்றும் அவற்றால் ஏற்படக்கூடிய பாதகமான விளைவுகள் குறித்தும் ஜனாதிபதி இங்கு சுட்டிக்காட்டினார். எவ்வாறாயினும், இந்தச் சவால்களைச் செயற்றிறன் மிக்க வகையில் முகாமைத்துவம் செய்வதற்கும் அவற்றின் தாக்கத்தைக் குறைப்பதற்கும் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக ஜனாதிபதி, சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகளுக்கு உறுதியளித்தார்.

ஐரோப்பிய ஒன்றியத்துடனான இலங்கையின் வர்த்தக உறவு, குறிப்பாக இலங்கையின் 23மூ ஏற்றுமதிகளுக்கு ஐரோப்பிய ஒன்றிய சந்தைகளுக்கு அனுமதி வழங்கும் ஜி.எஸ்.பி. பிளஸ் வர்த்தகச் சலுகை பற்றியும் இங்கு அவதானம் செலுத்தப்பட்டன.

முதலீட்டு வாய்ப்புகளை விரிவுபடுத்துவதற்கான இலங்கையின் அர்ப்பணிப்பை வலியுறுத்திய ஜனாதிபதி அநுரகுமார, முதலீட்டாளர்களின் நம்பிக்கையை அதிகரிப்பதுடன் பொருளாதாரத்தை மீட்டெடுக்க உதவும் என்றும் தெரிவித்தார்.

தற்போதைய ஆட்சி மக்களை மையமாகக் கொண்டது என்றும், மக்களின் அபிலாஷைகளுக்கு ஏற்ப நாட்டை முன்னோக்கி கொண்டுசெல்ல அரசு அர்ப்பணிப்புடன் உள்ளது என்றும் ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தினார்.

இலங்கையில் தனக்குக் கிடைத்த அமோக வரவேற்புக்கு திருமதி கோபிநாத் ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்ததுடன், பொதுத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சித் தேர்தல்கள் இரண்டிலும் அரசுக்குக் கிடைத்த வலுவான மக்கள் ஆதரவு, அத்தியாவசிய மறுசீரமைப்புகளைச் செயற்படுத்த அரசுக்குப் பலமாக இருக்கும் என்றும் குறிப்பிட்டார்.

கடுமையான நெருக்கடியிலிருந்து நாட்டின் பொருளாதார முன்னேற்றத்தைப் பிரதிபலிக்கும் வகையில் அடைந்த பொருளாதார வளர்ச்சியையும், மிக அதிக பணவீக்க விகிதத்திலிருந்து பணவீக்க விகிதம் குறைந்ததையும் குறிப்பிட்ட அவர், கடந்த இரண்டு ஆண்டுகளில் இலங்கை அடைந்துள்ள குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தையும் பாராட்டினார்.

அதேபோன்று, அரச நிர்வாக மறுசீரமைப்புகளில் அரசு அடைந்துள்ள முன்னேற்றத்தைப் பாராட்டிய அவர், இந்த முயற்சிகளை நிலைநிறுத்தி விரிவுபடுத்துவதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.

இலங்கையின் மறுசீரமைப்பு மற்றும் மீட்சி செயற்பாட்டில், சர்வதேச நாணய நிதியம் உறுதியான பங்காளியாக இருக்கும் என்று திருமதி கோபிநாத் உறுதியளித்தார்.

தொழில் அமைச்சர் மற்றும் பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, ஜனாதிபதியின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க, மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க, ஜனாதிபதியின் சிரேஷ்ட பொருளாதார ஆலோசகர் துமிந்த /ஹுலங்கமுவ, நிதி அமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன, ஜனாதிபதியின் சிரேஷ்ட மேலதிக செயலாளர் ரஸல் அபொன்சு ஆகியோரும் இந்த நிகழ்வில் கலந்துகொண்டனர்.

# தென்னிலங்கையில் கோர விபத்து சகோதரிகள் பலி – சிறுமிகள் படுகாயம்



கொழும்பு, ஜூன் 16

தென்னிலங்கையில் இறுதிச் சடங்கிற்கு சென்று திரும்பிய சகோதரிகள் கோர விபத்தில் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

ஹொரணை - கொழும்பு பிரதான வீதியில் நேற்றிரவு விபத்து ஏற்பட்டதாக மொரகஹஹேன பொலிஸார் தெரிவித்தனர். வீதியை கடக்க முயன்ற நால்வர் மீது கார் ஒன்று மோதியமையினால் விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்தனர்.

விபத்தை ஏற்படுத்திய 28 வயதான சாரதி கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவர் மதுபோதையில் இருந்ததாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இறுதிச்சடங்கு நிகழ்வொன்றுக்கு சென்ற சகோதரிகள் இருவரே தங்களது இரண்டு மகள்களுடன் அருகில் உள்ள உறவினர் வீட்டுக்குச் செல்வதற்காக வீதியை கடக்க முயன்ற போது இந்த விபத்து ஏற்பட்டுள்ளது.

காயமடைந்த நால்வரும் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் சகோதரிகள் இருவரும் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். 45 மற்றும் 50 வயதுடைய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த சகோதரிகள் இருவரே இவ்வாறு உயிரிழந்துள்ளனர். காயமடைந்த 11 மற்றும் 17 வயதுடைய இரு மகள்களும் களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# உயர்தரத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களுக்கு வெளியான மகிழ்ச்சி தகவல்

2023/2024 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் மாவட்ட மட்டத்தில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற மாணவர்களை மாகாண மட்டத்தில் பாராட்டும் நிகழ்ச்சித் திட்டத்தை ஜனாதிபதி நிதியம் ஏற்பாடு செய்துள்ளது.

அங்கு, 2023ஃ2024 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் ஒவ்வொரு பாடப்பிரிவிலும் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற, ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் 60 மாணவர்களைத் தேர்ந்தெடுத்து, அவர்களுக்கு நிதி புலமைப்பரிசில் மற்றும் சான்றிதழ்களை வழங்க திட்டமிடப்பட்டுள்ளது.

2023ஃ2024 பரீட்சைகள் தொடர்பாக பரீட்சைகள் திணைக்களம் மற்றும் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்ட பெறுபேறுகளை கருத்தில் கொண்டு இந்த மாணவர்கள் தெரிவு, மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மாகாண மட்டத்தில் செயல்படுத்தப்படும் திட்டத்தின் முதல் நிகழ்ச்சித்திட்டமாக, 2023 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற, வட மாகாண மாணவர்களைப் பாராட்டும் நிகழ்வு 2025 ஜூன் 22 ஆம் திகதி கிளிநொச்சியில் நடத்த அனைத்து ஏற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

அதன்படி, 2023 க.பொ.த உயர்தரப் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள் இவ்வாறு பாராட்டப்படவுள்ளனர்.

இதேவேளை, ஏனைய மாகாணங்களிலும் விரைவில் நிகழ்ச்சிகளை நடத்துவதற்குத் தேவையான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (ஐ)







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.06.2025 வெளியிடப்பெற்றது.